# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 26 புதன்கிழமை 25.12.2024 கதிர் 76





வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மாலைக்கதிரின் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்கள்




## இராணுவத்தினரின் காணிகளைக் கேக்கவில்லை தமது சொந்தக் காணிகளையே கேக்கிறார்கள்!

### –தென்னிலங்கையை சிவில் அமைப்புகளுக்கு ஆளுநர் விளக்கம்–

(யாழ்ப்பாணம், டிச. 25)

இராணுவத்தினரின்காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. அவர்களின் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்ற தெளிவுபடுத்தலை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள்ளேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.



வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் இன்று புதன்கிழமை காலை லவயாவியானில் நடைபெற்றது.

அந்தப் பிரதேச மக்கள் சார்பில் கருத்துத் தெரிவித்த உ.சந்திரகுமாரன், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் இந்த மண்ணை நேசிக்கும் ஒருவர். நாம் தற்போது எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயற்பட முடியாது. கட்டம் கட்டமாக எமது காணிகளை விடுவிக்க ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என நாம் முழுமையாக நம்புகின்றோம் என்றார்.

இதன் போது, உரையாற்றிய 7➤

## "சைபர் கிரைம்" குறித்து எச்சரிக்கை!

(கொழும்பு, டிச. 25)

பண்டிகைக் காலங்களில் இணையம் ஊடாக பண மோசடிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சில பரிசுகளை வென்றதாக கூறி வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து பண மோசடி செய்ததாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவின் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த தெரிவித்தார். 7➤

# வளமான நாடு - அழகான வாழ்க்கைக்காக என்னை அர்பணித்துச் செயற்படுகிறேன்!

## – நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி–



(கொழும்பு, டிச. 25)

"வளமான நாடு – அழகான வாழ்க்கையை உருவாக்கும் ஒரே குறிக்கோளுடன , வீரியத்துடனும் உறுதியுடனும் என்னை அர்ப்பணிப்பேன் என்பதை புனித நத்தார் தினத்தில் மீண்டும் வலியுறுத்துகிறேன் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது நத்தார் தின வாழ்த்துச் செய்தியிலே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "துன்பத்தில் இருந்து அனைவரையும் காப்பாற்ற இவ்வுலகில் அவதரித்த இயேசு கிறிஸ்து, ஒருபோதும் ஏழை, பணக்காரன் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பார்த்ததில்லை. அதனால்தான் அன்னார் கடவுளின் குழந்தையாக இவ்வுலகில் பிறந்த நாளில் மிகவும் ஏழ்மையான மற்றும் அப்பாவி மனித சமூகமாக இருந்த மேய்ப்பர்களிடையே பிறக்கத் தேர்ந்தெடுத்தார்.

இவ்வாறாகத் தான் தேவதூதர்கள் அவர்களுக்கு நற்செய்தியை கொண்டு வந்தார்கள். எனவே, நத்தார் தினத்தில 7➤

## வசந்தா ஹந்தபாங்கொட மறைவு

(கொழும்பு, டிச 25)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் வசந்தா ஹந்தபாங்கொட காலமானார்.

திடீர் உடல்நலக்குறைவு காரணமாக அவர் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

சமீபத்தில், இங்கிலாந்தில் உள்ள தனது மகளைப் பார்க்கச் சென்றிருந்த அவர், திடீர் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு இரண்டு நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி காலி முகத்திடலில் இடம் 7➤

## ஆசிரியர் பிரச்சினைக்கு அடுத்த ஆண்டில் தீர்வு ஆளுநர் வேதநாயகன் நம்பிக்கை தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம், டிச. 24)

வடக்கு மாகாண ஆசிரியர் பிரச்சினைக்கு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் தீர்வு காண எதிர்பார்ப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதன்போது வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கருத்து தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வளப் பங்கீடு சரியான முறையில் நடைபெறவில்லை எனச் சுட்டிக்காட்டியதோடு, ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல அதிகாரிகளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கலந்துரையாடல் நடாத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வேளையில், ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த காலங்களில் வடக்கு 7➤

## ரூபவாஹினியின் தலைவர்
# பதவி விலகல்!

கொழும்பு, டிச. 25

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி செனேஷ் பண்டார திஸாநாயக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் பதவி ஏற்று மூன்றே மாதங்களில் தனது பதவியில் இருந்து விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது சமூக ஊடகப் பதிவொன்றில், தனது பதவிக்காலம் எப்போதுமே தற்காலிகமானதாகும். "நான் மூன்று மாதங்களுக்கு மட்டுமே இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டேன், நான் ஒதுங்க வேண்டிய நேரம் இது," என்று அவர் குறிப்பிட்டுள்ளார். 7➤



# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட ஏற்பாட்டில் திருமுறை பவனியும், மார்கழிப் பெருவிழாவும்!






(யாழ்ப்பாணம், டிச. 25)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இன்று காலை இந்த நிகழ்வு ஆரம்பமாகியது. நிகழ்வுக்கு முன்னதாக யாழ்ப்பாணம் - வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டைத் தொடர்ந்து திருமுறைகளைத் தாங்கிய யானை நகர்வலம் இடம்பெற்றது.

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இருந்து யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்குத் திருமுறைகள் யானைகளினில் மீது நகர்வலமாக எடுத்து வரப் பட்டன.

இந்த நிகழ்வில், இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பழனி ஆதீன குருமகா சந்நிதானம் சாது சண்முக அடிகளார், தென்னாடு ஆதீன முதல்வர் குணரத்தினம் (தென்னவன்) பார்த்தீபன், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் மார்கழிப் பெருவிழா இரண்டு அரங்க அமர்வுகளாக இடம்பெற்றது.

காலை 9:30 மணிக்கு தில்லைக்கூத்தன் திருவம்பலம் அரங்கும், பிற்பகல் 1:30 மணி முதல் சேக்கிழார் அமர்வும் இடம்பெற்றன.

சைவத்திருமுறை ஓதல், நடன நிகழ்வுகள் மற்றும் இந்திய, ஈழத்து அறிஞர்களின் சிறப்புரைகளும், மார்கழிப் பெருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட திருவாசகப் பேச்சு, கட்டுரைப் போட்டிகளின் பரிசளிப்பும், மெய்கண்டார் விருது வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது. (ஐ-09)

## வேலை நிறுத்தம் செய்ததனால் பணிநீக்கப்பட்ட மின்சார சபை ஊழியர்களுக்கு மீள் நியமனம் !

(கொழும்பு, டிச. 25)

தனியார் மயமாக்கலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமைக்காக பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கை மின்சார சபையின் அறுபத்தியிரண்டு ஊழியர்கள் நட்டஈட்டுடன் மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இலங்கை மின்சார சபையைத் தனியார்மயமாக்கும் முயற்சிகளை எதிர்த்து கடந்த இண்டு ஜனவரி மாதம் மின்சார சபையின் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்த ஊழியர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அப்போதைய மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சாரம் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததால் நுகர்வோருக்கு இடையூறுகள் ஏற்பட்டதாக் காரணம் காட்டி, போராட்டத்தின் போது கடமைக்குச் சமூகமளிக்காத ஊழியர்களைப் பணி இடைநிறுத்தம் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்காவின் புதிய அரசாங்கத்தின் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களின்வறிதாக்கல்கட்டளைகள் மற்றும் பழிவாங்கும் வகையிலான இடமாற்ற உத்தரவுகளை இரத்துச் செய்து அவர்களுக்கான மீள் இணைப்புக் கடிதங்களை நேற்று வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது, இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் உட்பட பல இலங்கை மின்சார சபை அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். (ஐ-12)

## வரவு – செலவு சமர்ப்பிக்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை – தேர்தல் ஆணைக்குழு!

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் தமது, வரவு - செலவு அறிக்கையை சமர்ப்பிக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதாவது, கடந்த பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள், சுயாதீனக் குழுக்கள் சார்பில் 8388 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுள், பொதுத் தேர்தலில் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பித்த வேட்பாளர்களின் பட்டியல் மாவட்ட செயலகங்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.




ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் சிலர் இன்னமும் தமது வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

இதனால், இவர்களது பெயர் பட்டியலை பொலிஸாரிடம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளதுடன் பொலிஸார் இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கையை எடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த வருடத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு தொடர்பில் விசேட அறிவிப்பு

கொழும்பு, டிசெ 25

திருத்தம் செய்யப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இதன்படி 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நன்புரி சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்குவழங்கப்பட்ட விசேட அதிகாரங்களுக்கு அமைவாக இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வறிய சமூகப் பிரிவினருக்கு தற்போது வழங்கப்படுகின்ற மாதாந்த நலன்புரிக் கொடுப்பனவுத் தொகையை 8,500 ரூபாவில் இருந்து 10,000 ரூபா வரை அதிரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், வறிய சமூகப் பிரிவினருக்கு கீழுள்ள தரப்புக்கு வழங்கப்பட்ட 15,000 ரூபாவை 17,500 ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

அத்தோடு, நலன்புரிப் பலன்களைப் பெறும் மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப் படக்கூடிய மற்றும் மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கான சமூகப் பிரிவுகளில், 480,000 குடும்பங்களுக்கு மாதாந்த நல உத வித்தொகை 5,000 மற்றும் 17,000 ரூபா வழங்கப்படும்.

தொடர்ந்து, 960,000 வறிய குடும்பங்களுக்கு 10,000 ரூபா நலன்பரி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன. இது இடைநிலை மற்றும் பாதிக் கப்படக்கூடிய குடும்பங்களுக்கான இழப்பீடு காலத்தை 31.03.2025 வரை நீட்டித்துள்ளது என வர்த்தமானியில் கூறப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2024 மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்டஅஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு முறைமை இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏற்கனவே பலன்களை பெற்று, பல்வேறு காரணங்களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் பயனாளிகளுக்கும், மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்து தற்போது பரிசீலனைக்கு உள்ளான விண்ணப்பதாரர்களுக்கும், அவர்களின் தகைமையின் அடிப்படையில் இம்மாதம் 31ஆம் திகதி வரையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறி வித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# வீதி புனரமைக்க கோரி மக்கள் போராட்டம்







கொழும்பு, டிசெ 25

யுத்தம் நிறைவடைந்த இத்தனை வருடங்கள் கடந்துள்ள நிலையில் எந்தவொரு அரசாங்கத்தினாலும் புனரமைக்கப்படாத பிரதான வீதியினால் பாதிக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை பிரதேச தமிழர்கள், குறித்த வீதியை விரைவில் புதுப்பிக்குமாறு கோரி போராட்டம் நடத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறப்பிடம் வல்வெட்டித்துறை என்பதால் அந்த பிரதேசத்தில் அமைந்துள்ள வீதியை சீரமைக்க எந்தவொரு அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை என வல்வெட்டித்துறை நகரசபைக்கு முன்பாக வார இறுதியில் முன்னெடுக்கப்பட்ட அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்ட பிரதேசவாசிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த வீதியின் புனரமைப்பு முந்தைய அனைத்து அரசாங்கங்களாலும் புறக்கணிக்கப்பட்டதாக வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் இராமச்சந்திரன் சுரேன் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

“கடந்த கால அரசாங்கங்கள் அடுத்த வருடம் என தொடர்ச்சியாக திட்டமிட்டு செயற்பட்டமையால் இந்த வீதி இப்படி இருக்கின்றது. விடுதலை புலிகளின் தலைவர் பிறந்த மண் என்ற காரணத்திற்காக, தர வீதிகளில் இலங்கையில் புனரமைக்கப்படாமல் இருக்கும் ஒரே வீதி இது என்று தான் நான் நினைக்கின்றேன். கடந்த கால இனவாத அரசாங்கங்களால் கைவிடப்பட்ட இந்த வீதியை புனரமைக்க வேண்டும்.” என குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னரும் பொன்னாலையில் இருந்து பருத்தித்துறை வரையான வீதி புதுப்பிக்கப்படவில்லை என தெரிவிக்கும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், தொண்டமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரையான 12 கிலோ மீற்றர் தூரத்தையாவது உடனடியாக புனரமைக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூன்று தசாப்தங்களாக வடக்கில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், வடக்கில் 90 வீதமான வீதிகளை அரசாங்கம் புதுப்பித்துள்ளதாகத் தெரிவிக்கும் பிரதேசவாசிகள், நோயாளிகளை சரியான நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாமல் வழியில் உயிரிழந்தமைக்கு இவ்வீதி புதுப்பிக்கப்படாமையே காரணமாகும் என வலியுறுத்தியுள்ளனர்.

“எங்கள் வீதி எமக்கு”, “தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிறந்த ஊர் என்பதால் இனவாத அரசால் நிராகரிக்கப்பட்டதா?”, “புதிய அரசே எமது வீதியை புனரமைத்துத் தா”, “அவசர சிகிச்சைக்காக செல்லும் போதே ஆயுள் முடிகிறதே” போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மக்கள், வல்வெட்டித்துறை மாநகர சபை உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த திணைக்களத்திடம் கையளிப்பதற்கான மனு ஒன்றிலும் பொதுமக்களிடம் கைழுத்துப் பெற்றுள்ளனர். (ஐ)

# ஜனாதிபதி நிதி மோசடி குறித்து சிஐடி விசாரணைகள் ஆரம்பம்



கொழும்பு, டிசெ 25

ஜனாதிபதி நிதியில் முறைகேடு நடந்துள்ளதா என்பது குறித்து குற்றப் புலனாய்வுப்பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக “பொது பணத்தை பாதுகாக்கும் சட்டத்தரணிகள்” அமைப்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், குறித்த முறைபாட்டிற்கு அமைய விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி நிதிச் சட்டத்தில் நிதியின் பணத்தை எப்படிச் செலவிட வேண்டும் என்பது குறித்து தெளிவான உத்தரவுகள் உள்ளன.

எனவே, அந்த உத்தரவுக்கு புறம்பாக பணம் செலவிடப்பட்டுள்ளதனால் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மிதி வெடி

இப்பத்தான் தொடங்கின மாதிரிக் கிடக்குது, அதுக்குள்ள முடியப்போகுது. இன்னும் அஞ்சு நாள் போனால் அடுத்த வரிசம் வரப்போகுது.

ரெண்டு “எலக்சன்” நடந்தது தான் மிச்சம். ஆனதா ஒண்டும் நடக்கேல்லப் பாருங்கோ..

“எலக்சன்”ல “செலக்ற்” ஆகி கதிரைக்குப் போன ஒருத்தரும் ஒண்டும் செய்யினமில்ல. எண்ணெண்டு செய்ய ஏலும்? ஏதும் செய்யக் கூடிய ஆக்கள் எண்டாத் தானே அவையால செய்ய ஏலும்?

எங்கட ஆக்கள் தலைமைப் பதவிக்கும் - “பார் பெமிட்”க்குமாகத் தங்களுக்குள்ள பிரிஞ்சு நிண்டு, ஆளாளுக்குக் கன்னை பிரிஞ்சு நிண்டதால, ஏதோ மாற்றம் வரும் எண்டு நம்பி வாக்குப் போட்ட சனத்துக்கு மிஞ்சினது “ஏ”மாற்றம் மட்டுந்தான்.

தமிழ்த் தேசியக்காரரில வந்த வெறுப்பால விழுந்த வாக்கில வந்த “அக்ஸிடென்றல் எம்.பி” மாருக்கு அங்க போய் எதைக் கதைக்கிறது, என்னத்தைச் செய்யுறதெண்டு ஒரு மண்ணாங்கட்டியும் விளங்குதில்லைப் பாருங்கோ...

தேசிய மக்கள் சக்தி சார்பில போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளரக இருக்கட்டும், நாடாளுமன்ற வேட்பாளர்களாக இருக்கட்டும் எல்லாருமே “ஊழலை ஒழிப்பம்” எண்ட பெருங் கோசத்தின் தான் ஆட்சிக் கதிரையில வந்து அமர்ந்தவை.

முன்னம் பின்னம் அனுபவமில்லாமல் வந்தவை “வெழுத்ததெல்லாம் பால்” எண்டு நம்பி இறங்கினதால மக்களுக்கு இருந்த நம்பிக்கை போயிட்டுது பாருங்கோ..

முந்தின காலத்தில ஆர் ஆட்சிக்கு வருகினமோ, அவையளோட போய் “பல்லி” மாதிரி ஒட்டிப் பழகிப்போன ஆக்கள் எல்லாரும், இப்பத்த ஆக்களிட்டையும் போய் ஒட்டின உடன, அவை எல்லாரும் நல்லவை-வல்லவை-நேர்மையானவை எண்டு நம்பி, போதாக்குறைக்குப் பொறுப்புகளையும் பகிர்ந்து குடுத்ததால இப்ப சனத்துக்குத் துண்டற வெறுத்துட்டுது.

ஆட்சி மாறினாலும், காட்சி மாறேல்ல எண்டா ஆரால தான் சகிக்கேலும் பாருங்கோ..?

போன ஆட்சியில அமைச்சருக்கு வால் பிடிச்சவைக்கு இந்த ஆட்சியில அபிவிருத்தி சபை ஒண்டுல தலைவர் பதவி, போன ஆட்சியில பகிரங்கமாப் பசை வாளியோட திரிஞ்சவை, இந்த முறை “எலக்சன்”க்கு முதல் நாள் கூட்டத்துக்கு வந்ததுக்காகப் பணிப்பாளர் பதவி..

இப்பிடி ஆக்களிண்ட நீள, அகலங்கள் தெரியாமல் “என்.பி.பி”யும் இருக்கிறதால சனத்துக்குக் கடும் கடுப்புப் பாருங்கோ... எல்லாம் வாற உள்ளூராட்சித் தேர்தலோட தான் உறைக்கும் பாருங்கோ...

“எலக்சன்” க்கு இடையில மழை, வெள்ளம் தண்ணி எண்டு வந்தால், “சப்போர்ட்” பண்ணுறம், சாப்பாடு குடுக கிறம் எண்டு படம் ஓடலாம். அதுவும் இல்லாட்டி எங்கட சனம் நல்லாப் படிப்பிச்சுப் போட்டுத் தான் விடும்.

உங்களுக்கு ஒண்டு தெரியுமே? ஆர் என்ன ஆட்டம் போட்டாலும் கடைசியில வாக்குச் சீட்டு மக்களின்ர கையில...

கள்வர்கள் கவனம்!

–நரமுனி–

# உத்தரகாண்டில் 3 புதிய குற்றவியல் சட்டங்கள்: விரைவாக அமுல்படுத்த அமித்ஷா வலியுறுத்தல்

நாடு முழுவதும் நடப்பு ஆண்டு ஜூலை 1-ந் திகதி 3 புதிய குற்றவியல் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இந்தியாவில் சட்ட நடைமுறையை அதிக வெளிப்படை தன்மை, திறம்பட மற்றும் தற்கால சமூக தேவைகளுக்கு ஏற்ப தகவமைத்து கொள்ளும் வகையில் இவை நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன.

இந்நிலையில், உத்தரகாண்டில் 3 புதிய குற்றவியல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றிய மறுஆய்வு கூட்டம் ஒன்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தலைமையில் இன்று நடந்தது.

இதில், புதிய சட்டங்களானது பாதிக்கப்பட்ட மற்றும் குடிமக்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்டவை என சுட்டி காட்டப்பட்டு உள்ளது. அந்த உணர்வுடன் அவை அமுல்படுத்தப்பட வேண்டும் என கூறிய அமித்ஷா, ஒவ்வொரு 15 நாட்களுக்கு ஒரு முறை சட்டங்களின் முன்னேற்றம் பற்றி மறுஆய்வு செய்ய வேண்டும் என்று புஷ்கர் சிங் தமியை, அவர் வலியுறுத்தி உள்ளார்.

இதேபோன்று அனைத்து தொடர்புடைய துறை அதிகாரிகளுடனும், வாரம் ஒரு முறை என்ற அடிப்படையில் மறுஆய்வு செய்ய வேண்டும் என்று முதன்மை செயலாளர் மற்றும் டி.ஜி.பி.க்கு அறிவுறுத்தி உள்ளார். தொழில் நுட்பம் மற்றும் பிற குறைபாடுகளை அரசு சரிசெய்து, இந்த புதிய சட்டங்களை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக 100 சதவீதம் அமல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டு கொண்டார்.

அதிக எண்ணிக்கையிலான எப்.ஐ.ஆர். கள் பதிவான பகுதிகள், காவல் நிலையங்கள் மற்றும் சிறைகளில் இந்த சட்டங்களை முழு அளவில்

அமுல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கும்படியும் அவர் மேலும் வலியுறுத்தி உள்ளார்




# சபரிமலையில் தரிசனம் செய்ய இருமுடி கட்டி புறப்பட்ட 101 வயது மூதாட்டி!



வயநாடு மாவட்டம் முன்னானிக்குழி பகுதியை சேர்ந்தவர் பாருக்குட்டி (வயது 101). இவர் தனது பேரன், பேத்தி உள்ளிட்டோருடன் இருமுடி கட்டி சபரிமலை ஐயப்பன் கோவிலில் தரிசனம் செய்ய புறப்பட்டார்.

முன்னதாக அவர் கோனேரி நாராயண குரு சண்முகா கோவிலில் நெய், தேங்காய் மூலம் இருமுடி கட்டினார். கடந்த ஆண்டு பாருக்குட்டி தனது 100 வயதில் முதல்முறை சபரிமலை சென்று தரிசனம் செய்தார். அப்போது வயது முதிர்வை கருத்தில் கொண்டு பொலிஸார் , தேவசம்போர்டு அதிகாரிகள் கூட்டத்தில் சிக்கி விடாமல் தரிசனம் செய்ய வைத்தனர். இதனால் இந்தமுறை நான் சபரிமலை செல்ல விரும்புகிறேன் என்று பாருக்குட்டி தெரிவித்தார். அவர் சபரிமலை ஏறி கூட்டத்தில் நிற்காமல் தரிசனம் செய்ய போதுமான வசதிகளை செய்து கொடுக்க பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தேவசம்போர்டு அதிகாரிகளுக்கு கடிதம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

# ஊழல் புகார் எதிரொலி: செபி தலைவர் நேரில் ஆஜராக லோக்பால் அறிவிப்பு!



ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் செபி அமைப்பின் தலைவர் மாதபி பூரி புச் மற்றும் புகார் தாரரான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.பி. மஹுவா மொய்த்ரா ஆகியோர் வருகிற ஜனவரி 8ம் திகதி நேரில் ஆஜராக லோக்பால் அமைப்பு அறிவித்துள்ளது.

அதானி குழுமம் பங்குச் சந்தையில் முறைகேடு செய்ததாக எழுந்த குற்றச்சாட்டில் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமான செபி தலைவர் மாதபி பூரி புச்-க்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்க ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் குற்றம்சாட்டி இருந்தது. இந்த விவகாரத்தில் மாதபி பூரி புச் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் சார்பில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், செபி தலைவர் மாதபி பூரி புச் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எம்.பி. மஹுவா மொய்த்ரா லோக்பால் அமைப்பில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு தொடர்பாக வருகிற 28ம் திகதி விசாரணை நடைபெறும் என்றும் அதில் செபி அமைப்பின் தலைவர் மாதபி பூரி புச் மற்றும் எம்.பி. மஹுவா மொய்த்ரா உள்ளிட்டோர் ஆஜராக வேண்டும் என்று லோக்பால் சார்பில் அறிவிப்பு அனுப்பப்பட்டு இருக்கிறது.

# புதுச்சேரியில் 5,8-ம் வகுப்பு கட்டாய பரீட்சை முறை இரத்து: கல்வித்துறை அமைச்சர் வெளியிட்ட தகவல்





மத்திய அரசு 5, 8-ம் வகுப்பில் அனைத்து மாணவர்களும் கட்டாய பரீட்சை என்ற முறையை இரத்து செய்துள்ளது.

குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த முடிவை அரசு எடுத்துள்ளது. இந்நிலையில் மத்திய அரசு பாடசாலைகளான கேந்திர வித்யாலயா, நவோதயா, சைனிக் ஆகிய பாடசாலைகளில் கட்டாய தேர்ச்சி முறை இரத்தாகியுள்ளது.

புதுச்சேரியிலுள்ள பிராந்தியங்களான புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாமில் நடப்பு கல்வி ஆண்டு முதல் அனைத்து வகுப்புகளில் மத்திய பாடத்திட்டமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் அமலாகியுள்ளது. இதன்படி முதல்முறையாக சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் கீழ் பொதுப் பரீட்சைகளையும் புதுவை மாணவர்கள் எழுத உள்ளனர். இந்த நிலையில் கட்டாய பரீட்சை இரத்து குறித்து முதலமைச்சர் ரங்கசாமியுடன் கலந்து ஆலோசித்தார். இதையடுத்து கல்வி அமைச்சர் நமச்சிவாயம் கூறியதாவது:-

புதுச்சேரி மத்திய அரசின் கல்வித்திட்டத்தின் கீழ் செயற்பட்டு வருகிறது. மத்திய அரசின் உத்தரவை புதுச்சேரி அரசு ஏற்று செயல்படும். இதன் மூலம் அரசு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித் தரம் உயரும். அதன் அடிப்படையில் தான் மத்திய அரசு இந்த திட்டத்தை கொண்டு வந்துள்ளது.

தனியார் பாடசாலைகளுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் எனவும் தனியார் பாடசாலைகள் நிச்சயமாக கல்வித் துறை உத்தரவை பின்பற்ற வேண்டும் எனவும் நமச்சிவாயம் இதன்போது கூறினார்.

# துயரம் தரும் துரித உணவு!



## மோனோசோடியம் குளூடமேட் சுவையூட்டியின் அபாயம்

துரித உணவுகளுக்கு எதிரான பிரசாரங்கள் அண்மையில் தொடங்கியதல்ல. ஆரம்பம் முதலே துரித உணவுகளின் தீங்குகளை உணர்ந்து ஒரு சாரார் எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். சுவையூட்டிகள், பதப்படுத்திகள், உப்புகள், நிறமிகள் என நமது உணவுத் தட்டில் துரிதமாக இடம்பிடிக்கும் துரித உணவுகளுக்குள் ஒளிந்திருக்கும் விஷயங்களோ ஏராளம்.

அவற்றில் குறிப்பாக மோனோசோடியம் குளூடமேட் (Monosodium glutamate) எனும் சுவையூட்டி குறித்து நாம் அக்கறைகொள்ள வேண்டியிருக்கிறது. இது சுருக்கமாக ஹஎம்.எஸ்.ஜி'. (MSG) என்று அழைக்கப்படுகிறது. குளூடமிக் அமிலம் எனும் அமினோ அமிலத்தின் உப்பு வடிவம்தான் எம்.எஸ்.ஜி. மோனோசோடியம் குளூடமேட் சார்ந்த பல்வேறு சர்ச்சைகள் நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றன.

ஜப்பானைச் சேர்ந்த கிகுனே இகிடா (Kikunae Ikeda) என்பவர்தான் 1908 ஆம் ஆண்டு முதன் முதலில் வெள்ளை நிறத்திலான மோனோசோடியம்குளூடமேட்டின் சுவையூட்டும் தன்மை குறித்து அறிமுகம் செய்தார். அதிகச் செலவில்லாமல் உணவுகளுக்குச் சுவையூட்டப் பயன்படும் பொருள்' என்ற வகையில் ஜப்பான் மக்களிடையே இது பரவியது. இதைக் கண்டுப்பிடித்த கிகுனே இகிடா, 'யுமாமி' (ஜப்பானிய மொழியில் 'சுவையானது') என்று 'எம்.எஸ்.ஜி'-க்கு பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

ஜப்பானிய இல்லத்தரசிகளைக் குறிவைத்த வியாபாரம் பட்டையைக்கிளப்ப, விரைவில் அனைத்துச்சமையலறைகளிலும் நீக்கமற இடம்பிடித்தது எம்.எஸ்.ஜி. உணவக மேஜைகளிலும் கைக்கெட்டும் தூரத்தில் அது காட்சிப்படுத்தப்பட்டது. ஜப்பானைத் தொடர்ந்து தைவான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் பரவியது. தைவானில் பெரும்பாலான உணவுகளில் எம்.எஸ்.ஜி சேர்க்கப்பட்டு சுவையற்ற உணவுக ளுக்குப் புதுமையான சுவையைக் கொடுத்து, மக்களின் நாவோடு ஒன்றிணைந்தது. பல்வேறு நாடுகளுக்குப் பரவும்போது, அங்குள்ள உணவு அரசியல் சார்ந்து தொடர்ந்து சர்ச்சைகள் கிளம்பியவண்ணம் இருந்தன.

'மனிதன் சுவைக்கு அடிமை' என்பதைப் புரிந்துகொண்ட பல பன்னாட்டு உணவுப்பொருள் நிறுவனங்கள், தங்கள் தயாரிப்புகளில் மோனோ சோடியம் குளூடமேட்டை சுவையூட்டியாகப் பயன்படுத்து கின்றன. இதன் தனித்துவம் என்னவென்றால், பிரத்தியேக சுவையைக் கொடுப்பதோடு, திரும்பத் திரும்ப அதே உணவை உண்ணத் தூண்டும் வகையில் செயலாற்றும். மதுப்பழக்கம், புகைப்பழக்கம்போல, மதிமயக்கும் செயற்கைச் சுவையூட்டி கலந்த துரித உணவுகளுக்கு அடிமையானவர்களும், போதைப் பழக்கத்துக்கு ஆளானவர்கள் போன்றவர்கள்தாம் என்று தாராளமாகச் சொல்லலாம்.

காளான், சீஸ், தக்காளி, சோயா சோஸ் போன்றவற்றிலுள்ள புரதங்களில் இயற்கையாகவே மோனோசோடியம் குளூடமேட் அடங்கியிருக்கும். கவர்களில் அடைக்கப்பட்ட சிப்ஸ், சூப் வகைகள், ரெடிமேடாகக் கிடைக்கும் குழம்பு மிக்ஸ், பதப்படுத்தப்பட்ட இறைச்சி, உடனடியாகத் தயாராகும் நூடுல்ஸ் மற்றும் அனைத்து வகையான துரித உணவுகளிலும் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட எம்.எஸ்.ஜி சேர்க்கப்படுகிறது. மேற்சொன்ன அனைத்திலும் கிடைக்கும் பிரத்தியேகச் சுவைக்கு அதில் கலக்கப்படும் எம்.எஸ்.ஜி தான் மிக முக்கியக் காரணம்.

சீன வகை உணவுகளில் மட்டுமே இடம்பெற்றிருந்த எம்.எஸ்.ஜி, இப்போது அனைத்து வகை உணவுகளிலும் நீங்காமல் இடம்பிடிக்கிறது. அதிகளவில் இதனை உட்கொள்ளும்போது, தலைவலி, மார்புப் படபடப்பு, தோலில் அரிப்பு போன்றவை ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. ஆஸ்துமா நோயாளிகளின் துன்பத்தை அதிகரிக்கும். தொடர்ந்து பயன்படுத்தினால், நரம்பு மண்டலத்தைத் தூண்டி, பாதிப்புகளை உண்டாக்கும். நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகளவில் உட் கொண்டால், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், உடல் பருமன் போன்ற தொற்றா வியாதிகளின் எண்ணிக்கைப் பெருகுவதாக ஹஜேர்னல் ஒஃப் நியூட்ரிஷன் அண்ட் மெட்டபோலிசம்' (Journal of Nutrition and Metabolism) ஆய் விதழில் வெளியான கட்டுரை தெரிவிக்கிறது.



கர்ப்பிணிகளும் குழந்தைகளும் எம்.எஸ்.ஜி சேர்ந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. ஆனால், இன்றையச் சூழலில் குழந்தைகளின் விருப்ப உணவாக இருக்கும் துரித உணவுகள் அனைத்திலும் எம்.எஸ்.ஜியின் தாக்கம் அதிகமிருக்கிறது. துரித உணவுகளைச் சாப்பிட்ட பிறகு, சிலருக்கு வாந்தி, குமட்டல் ஏற்படுவதற்கு இதுதான் முக்கியக் காரணம். தொடர்ந்து எம்.எஸ்.ஜி கலந்த உணவுகளுக்கு அடிமையாகும் போது, 'சாப்பிட்டது போதும்' என்று மூளைக்கு சிக்னல் கொடுக்கும், பசியுணர்வைக் கட்டுப்படுத்தக்கூடிய லெப்டின் (Leptin) ஹோர்மோனின் அளவு குறையுமாம். பிறகென்ன அன்லிமிடெட் மீல்ஸ்தான்! கட்டுப்பாடற்ற உணவு உடல் பருமனை ஏற்படுத்தும்.

'சைனீஸ் ரெஸ்டாரன்ட் சிண்ட்ரோம்' (Chinese Restaurant Syndrome) எனப் பெயரிட்டு வகைப்படுத்தும் அளவுக்கு எம்.எஸ்.ஜி சேர்ந்த சீன உணவுகளால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. தலைபாரம், குமட்டல், வயிற்றுவலி, அரிப்பு போன்றவை இதன் முக்கிய அறிகுறிகள். இதை, 'சைனீஸ் ரெஸ்டாரன்ட் சிண்ட்ரோ' என்பதைவிட 'எம்.எஸ்.ஜி சிண்ட்ரோம்' என அழைத்தால் சரியாகயிருக்கும். சீன உணவுகளில் மட்டுமா இப்போது எம்.எஸ்.ஜி சேர்க்கப்படுகிறது என்றால், 'ஓர் உணவுப் பொருளில் குறிப்பிட்ட அளவில் மட்டுமே சுவையூட்டிகள் சேர்க்கப்படுகின்றன. அதனால் யாருக்கும் தீங்கு ஏற்படாது' என்பது உணவுப் பெரு நிறுவனங்களின் வாதம். எஃப்.டி.ஏ-வும் அதையே முன்னிலைப்படுத்துகிறது. ஆனால், நாம் ஆசை ஆசையாகச் சாப்பிடும் அனைத்து துரித உணவுகளின் மூலமும் சிறிது சிறிதாக அவை உட்சென்றால் நிச்சயம் பாதிப்புதானே.

காலை முதல் இரவு வரை நாம் சாப்பிடும் உணவுகளை அலசி ஆராய்ந்தால், எவ்வளவு செயற்கைச் சுவையூட்டிகள் கொஞ்சம் கொஞ்சமாக நாவிலிருந்து ஆழமான செரிமானப் பகுதிக்குள் நழுவிச் செல்கின்றன என்பது தெரியவரும்.

ஹகொஞ்சம் டிகாக்ஷன் தூக்கலாகப் போட்டு coffe கொடுங்கள் ...' என்பதுபோல, 'எம்.எஸ்.ஜி தூக்கலாகப் போட்டு சீன உணவுகளைப் பரிமாறுங்கள்' என்று கேட்டு அதன் சுவைக்கு மயங்கிய கூட்டம் பன்னாட்டு உணவகங்களில் காத்துக் கிடக்கிறது. மளிகைக்கடைகளில் உப்பு, மிளகாய் கிடைப்பதுபோல, எம்.எஸ்.ஜி தாராளமாகக் கிடைக்கிறது. சமையல் பொருள்களை வாங்கும்போது, சர்வ சாதாரணமாக எம்.எஸ்.ஜி-யின் கம்பெனி பெயரைச் சொல்லி கேட்டு வாங்கிச்செல்லும் மக்களின் எண்ணிக்கையும் இப்போது அதிகம்.

எம்.எஸ்.ஜி எதிர்காலத்தில் ரேஷன் கடைகளில் கிடைக்காமல் இருந்தால் சரி. உணவுக்கு சுவை மற்றும் நறுமணத்தை வாரி வழங்குவதோடு, நோய் கள் வராமலும் தடுத்து நிறுத்தின நமது பாரம்பரிய நறுமணமூட்டிகள். செயற்கையாகக் கிடைக்கும் எம்.எஸ்.ஜி பிரத்தியேகச் சுவையைத் தரலாம். ஆனால், நோய்க ளுக்கு ஆதாரமாக விளங்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இதை வீட்டுச் சமையலறையினுள் நுழைய அனுமதிக்க வேண்டாம்.

எம்.எஸ்.ஜி சேர்ந்த உணவுகளை உட்கொள்பவர்களுக்கு உடனடியாகவும் பாதிப்புகள் உண்டாகலாம் பல நாள்கள் கழித்தும் உண்டாகலாம். எனவே, இதை அதிகளவில் உணவில் சேர்த்துக்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. தனியாகக் கொஞ்சம் எம்.எஸ்.ஜியைச் சுவைத்துப் பாருங்கள். பல்வேறு துரித உணவுகளின் அடிப்படைச் சுவையின் சூட்சுமம் தெரியவரும். தங்கள் உணவுகளின் பிரத்யேக சுவைக்கான ஆதாரத்தை (எம்.எஸ்.ஜி-யை) பல ஆண்டுகளாக சில நிறுவனங்கள் மறைபொருளாக வைத்திருந்தனவாம்!

எம்.எஸ்.ஜி-யின் சுவை பல ஆராய்ச்சியாளர்களால் ஐந்தாம் சுவையாக அங்கீகரிக்கப்பட்டது. பல்லாயிரம் வருடங்களாக இனிப்பு, புளிப்பு, உப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு என ஆறு சுவைகளை அடிப்படையாகக் கொண்டு உணவியல் நுணுக்கங்களை வடிவமைத்த நமது மரபுக்கு, இதென்ன புதிதாக 'ஐந்தாம் சுவை' என்ற கேள்வி உங்கள் மனதில் எழுந்தால், நீங்கள் மரபின் வழி ஆரோக்கியமாக பயணம் செய்கிறீர்கள் என்று அர்த்தம்.

# ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல்–15 பேர் பலி!



பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் இருந்து கொண்டு தெக்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பினர் சமீபகாலமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த அமைப்பினருக்கு ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்கள் ஆதரவளித்து வருவதாக பாகிஸ்தான் குற்றம்சாட்டி வருகிறது. இந்த குற்றச்சாட்டை தலிபான் அரசு மறுத்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று இரவு எல்லையையொட்டி ஆப்கானிஸ்தான் பத்திகா மாகாணம் பர்மால் மாவட்டத்தில் உள்ள லேமன் உள்ளிட்ட 7 கிராமங்கள் மீது பாகிஸ்தான் அதிரடி வான் வழித் தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தான் விமான படைக்கு சொந்தமான ஜெட் விமானங்கள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து சரமாரியாக குண்டுகளை வீசியது.

இந்த குண்டு வீச்சில் பர்மால் முர்க்பஜார் கிராமம் முற்றிலும் உருக்குலைந்தது. வீடுகள் கடும் சேதம் அடைந்தது. இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்து விட்டனர். இவர்களில் 5 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்தனர். பலரை காணவில்லை. படுகாயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானின் இந்த செயலுக்கு ஆப்கானிஸ்தான் தலிபான் அரசு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் பொது மக்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இது கோழைத்தனமான தாக்குதல் செயல். ஒருதலைபட்ச வான்வழித் தாக்குதல்.

இந்த தாக்குதலில் இறந்தவர்கள் பெரும்பாலானவர்கள் வஜிகிஸ்தான் பகுதியை சேர்ந்த அகதிகள் ஆவார்கள். பலரை காணவில்லை. இதனால் பலி எண்ணிக்கை உயரலாம்.

பொதுமக்களின் நிலங்கள், இறையாண்மை ஆகியவற்றை பாதுகாப்பது தங்களின் கடமையாகும். இந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்தலை பாகிஸ்தான் இன்னும் உறுதிபடுத்தவில்லை. ஆனால் எல்லைக்கு அருகில் உள்ள பயங்கரவாத அமைப்பினரின் மறைவிடங்களை குறிபார்த்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலையடுத்து பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது



## இஸ்மாயில் ஹனியேவைக் கொன்றதாக ஒப்புக்கொண்ட இஸ்ரேல்: ஈரான் கண்டனம்

ஹமாஸ் அமைப்பின் முன்னாள் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை இந்த ஆண்டு கொன்றது குறித்த ஒப்புதல் இஸ்ரேலின் வெட்கக்கேடான செயல் என்று ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது.

“இந்த கொடூரமான குற்றத்திற்கு இஸ்ரேலிய ஆட்சி தனது பொறுப்பை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது வெட்கக்கேடான செயல்” என்று ஐககிய நாடுகள் சபைக்கான ஈரான் தூதர் அமீர் சயீத் இரவானி ஐ.நா. பொதுச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார்.

முன்னதாக இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், ஹனியே கொலைக்கு தனது நாடு தான் பொறுப்பு என்று ஒப்புக்கொண்டார். கொன்று குவித்தது தொடர்பாக இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொண்டது இதுவே முதல் முறை ஆகும்.

காசாவில் போர் நிறுத்தத்திற்கான ஹமாஸின் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு தலைமை தாங்கிய ஹனியே, ஜூலை 31ம் திகதி தெஹ்ரானில் உள்ள விருந்தினர் மாளிகையில் கொல்லப்பட்டார்.

## 37 பேரின் மரண தண்டனையை குறைப்பதா? ஜோ பைடனுக்கு, டிரம்ப் கண்டனம்!



அமெரிக்காவில் நடந்த அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார். அவர் அடுத்த மாதம் (ஜனவரி) 20-ந் திகதி புதிய அதிபராக பதவி ஏற்க உள்ளார்.

இந்த நிலையில் தற் போதைய அதிபர் ஜோபைடன் அமெரிக்க நீதிமன்றங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 40 கைதிகளில் 37 பேருக்கு ஆயுள் தண்டனையாக குறைத்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இதற்கு டொனால்டு டிரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:-

குற்றவாளிகள் செய்த கொலைகளை வன்மையாக கண்டிக்கிறேன். அவர்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் வேதனையை பகிர்ந்து கொள்கிறேன். ஜோபைடன் நமது நாட்டில் மிக மோசமான கொலையாளிகள் 37 பேரின் மரண தண்டனையை குறைத்து உள்ளார்.

ஒவ்வொருவரின் செயல்களை கேட்டால் அவர் ஏன் இதை செய்தார் என நீங்கள் கேள்வி எழுப்புவீர்கள். எந்த அர்த்தமும் இல்லை. உறவினர்கள், நண்பர்கள் கூட இதனை நம்பமாட்டார்கள். நான் பதவிக்கு வந்தவுடன் மீண்டும் மரண தண்டனையை கொடுக்க வலியுறுத்துவேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரஷ்யாவில் அரிசி ஏற்றுமதிக்கு மேலும் 6 மாதங்கள் தடை நீட்டிப்பு!




கடந்த 2022-ம் ஆண்டு ரஷ்யாவில் உள்ள பெடோரோவ்ஸ்கி நீர்மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து மற்றும் ரஷ்யாவின் முதன்மை அரிசி உற்பத்தி செய்யும் பகுதியான கிராஸ்னோடர் பகுதியில் உள்ள நெல் வயல்களில் ஏற்பட்ட பெருவெள்ளம் ஆகியவற்றின் காரணமாக, அரிசி ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டது.

உள்நாட்டு சந்தைக்கு நிலையான விநியோகத்தை உறுதி செய்வதற்காக டிசம்பர் 31, 2024 வரை அரிசி ஏற்றுமதிக்கான தடை நீட்டிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நெல் விதைகளைத் தவிர, அரிசி மற்றும் அரிசிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தடையை மேலும் 6 மாதங்களுக்கு, ஜூன் 30, 2025 வரை நீட்டித்து ரஷ்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதே வேளை , அரிசி ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் யூரேசியன் பொருளாதார ஒன்றியம், அப்காசியா, தெற்கு ஒசேட்டியா, அத்துடன் மனிதாபிமான உதவிகள் மற்றும் சர்வதேச போக்குவரத்துக்கான ஏற்றுமதி ஆகியவற்றிற்கு பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மத்திய தரைக்கடலில் மூழ்கிய ரஷ்ய கப்பல்!



ரஷ்யாவின் ஜெயின் பீட்டர்ஸ் பெர்க் நகரில் இந்து கடந்த 12ம் திகதி விளாடிவொஸ்டோக் நகரில் உள்ள துறைமுகத்திற்கு சரக்கு கப்பல் புறப்பட்டது. அந்த கப்பலில் 16 மாலுமிகள் பயணித்தனர்.

இந்நிலையில், கடந்த 22ம்திகதி மத்திய தரைக்கடல் வழியாக கடல் வழியாக கப்பல் சென்றுகொண்டிருந்தது. ஸ்பெயினின் அகுலியாஸ், அல்ஜீரியாவின் ஓரன் நகர்களுக்கு அருகே சர்வதேச கடற்பரப்பில் மத்திய தரைக்கடலில் சென்றுகொண்டிருந்தபோது கப்பலின் எஞ்சின் அறையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

குறித்த தீ விபத்து குறித்து தகவ லறிந்த ஸ்பெயின் கடற்படையினர் மற்றும் அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த பிற கப்பல்கள் மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

இதில் ரஷ்ய கப்பலில் இருந்து 14 மாலுமிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். அதேவேளை, 2 மாலுமிகள் கடலில் விழுந்த நிலையில் அவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மீட்கப்பட்ட மாலுமிகள் ஸ்பெயினின் கார்டகினா நகருக்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கிருந்து அவர்கள் ரஷ்யாவுக்கு திரும்பி அனுப்பப்பட உள்ளனர். அதேவேளை, தீப்பற்றிய சரக்கு கப்பல் கடலில் மூழ்கியது.

## இராணுவத்தி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு ஆளுநர், “2015ஆம் ஆண்டு காலத்தில் யாழ். மாவட்டச் செயலராக நான் இருந்தபோது படிப்படியாக பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமரவில்லை என பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம். மக்களும் எதிர்பார்த்ததைப் போன்று மீள்குடியமர்ந்தார்கள்.

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தை தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை. இந்த ஆண்டு சிறிய அளவில் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாய பூமியாக மாற்றுவது தான் நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி. இடம்பெயர்ந்தவர்களின் வலி எனக்கும் தெரியும். நானும் இடம்பெயர்ந்த ஒருவன்தான். தற்போது யாழ். மாவட்ட இராணுவத்த தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனை உடைய ஒருவர். எனவே இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம்.

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையை தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக்கின்றேன்.

வடக்கு மக்கள் எல்லோருக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். விரைவில் சாதகமான விடயங்கள் நடக்கும் என நம்புகின்றேன் என்று தெரிவித்தார். (ஐ-09)

## ஆசிரியர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத்தில் இடம்பெற்ற முறையற்ற இடமாற்றங்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் தெரியப்படுத்தினர். இடமாற்றங்கள் பெயரளவுக்கே இடம்பெற்றன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான இடமாற்றங்கள் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

மேலும், வடக்கு மாகாணத்தின் முன்பள்ளிக் கல்வி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியதுடன், ஆசிரியர்களுக்கு தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் கோரிக்கைக் கடிதம் ஒன்று ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

## பதவி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததும், தேசிய ஒலிபரப்புக்குத் தலைமை தாங்கும் வகையில்

கலாநிதி செனேஷ் பண்டார திஸ ாநாயக்க நியமிக்கப்பட்டார்.

அவரது நியமனம் அரச ஊடக நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கும் சுதந்திரமான ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக்க் கலாநிதி செனேஷ் திஸாநாயக்க பண்டாரவின் நியமனம் அமைந்தது. (ஐ)

## சைபர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சில முறைகேடுகள் நடப்பதாக முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வாறான அழைப்புகள் மற்றும் சம்பவங்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-05)

## வளமான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை அர்த்தம், வாத பேதங்களை ஒதுக்கி, மனிதநேயத்தின் பெயரால், மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் செயற்படுவதாகும். நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தமான அமைதியின் பின்னணியில் இருந்து இந்த நத்தார் பண்டிகையை கொண்டாடி வருவதை உளப் பூர்வமான மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிடுகிறோம்.

சகல மக்களும் ஒன்றாக ஒரே நோக்கத்துடன் கூட்டுப் பொறுப்பாகக் கருதி நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்த ஒரு காலகட்டத்தை நாம் அடைந்துள்ளோம்,

அமைதி மற்றும் நல்லிணக்கத்தினால் பிணைந்து பூமியில் ஒரு புதிய விடியலின் அரவணைப்பை நாங்கள் அனுபவித்து வருகிறோம். அந்த பிரகாசமே இயேசு நமக்குக் கொண்டுவந்த அன்பின் விடியலாகும். பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக நமது நாடு படிப்படியாக மாற்றப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

மனித சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படையில் யேசுநாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை உண்மையாக்க ஒரு அரசாங்கமென்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இலங்கைக்குத் தேவையான சமூக மாற்றம் என்பது பாரியதொரு சமூக மாற்றமாகும். சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு சில துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழு சமூக மாற்றமாகும். இது ஒரு மறுமலர்ச்சியாகும்.

அந்தத் தேசிய மறுமலர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்பு, பொறுமை, நிதானம், அடங்காத துணிச்சல், இடையறாத முயற்சியுடன் பணியாற்றும் எமது அரசைச் சுற்றி திரண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய விடாது அவர்கள் எதிர்பார்க்கும் “வளமான நாடு-அழகான வாழ்க்கையை” உருவாக்கும் ஒரே குறிக்கோளுடன், மென்மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் என்னை அர்ப்பணிப்பேன் என்பதை புனித நத்தார் தினத்தில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

சுயநலம் மற்றும் தீங்கான போட்டியை சமூக கட்டமைப்பு தள்ளப்பட்டுள்ள போதும் , கிறிஸ்மஸில் வெளிப்படுத்தப்படும் மனித பண்புகளை வளர்த்து, சமத்துவத்தை மதித்து, மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துவதன் மூலம், சகோதரத்துவத்தையும் சகவாழ்வையும் மதிப்பதன் மூலம், அந்த சமூக கட்டமைப்பை நல்வழிப்படுத்தி மகிழ்ச்சிகரமான சமூகமொன்றுக்காக பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் கைகோர்க்க உறுதி பூணுவோம்.

வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக் கொண்ட உண்மையான உண்மையான அரசியல் கலாச்சாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஒரு அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதிபூணுவோம்.

இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்” என்று ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-12)

# ரயில் பயணத்துக்கு விரைவில் ‘ப்ரீபெயிட்’ அட்டை அறிமுகம்!

(கொழும்பு, டிச. 25)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர், தற்போது பயன்படுத்தப்படும் ரயில் டிக்கெட்டுக்கு பதிலாக முன்பணம் செலுத்திய ரயில் பயண அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக ரயில்வே திணைக்களம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளதோடு, இதன் மூலம் மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளது. இந்த அட்டைகளைப் பயன்படுத்துபவர்கள் ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் அணுகுவதற்குத் தேவையான தொழில்நுட்பக்கருவிகளும் நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது பயன்பாட்டில் உள்ள ரயில்வே டிக்கெட்டுக்கு பதிலாக முன்பணம் செலுத்திய ரயில்வே டிக்கெட்டை சரிபார்க்க, அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-06)

# இலங்கையில் அரிய நோய் உறுதி செய்த ஜெர்மன் மருத்துவர்கள்



*கொழும்பு, டிசெ 25*

*இலங்கையில் முதன்முறையாக* Congenital Methemoglobinemia *என்ற மிக அரிதான நோய் கண்டறியப்பட்டுள்ளது.*

*அதன்படி மதவாச்சி பகுதியிலுள்ள குழந்தை பாதிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவு விசேட வைத்திய நிபுணர் எம். ஆர். எஸ்.யு.சி. ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.*

*உடல் நீல நிறமாக மாறுவதும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவதும் இந்த நோயின் அறிகுறிகள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*மதவாச்சி பிரதேசத்தில் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் சிசுப் பிரிவில் மருத்துவ பரிசோதனைக்காக முன்கூட்டியே அனுமதிக்கப்பட்டது.*

*எனினும் அதற்கான பரிசோதனை வசதிகள் இல்லாததால், குழந்தையின் இரத்த மாதிரிகள் ஜெர்மனிக்கு அனுப்பி வைக்கப்பட்டு நோயின் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*எவ்வாறாயினும், நாட்டில் இந்த நோய்க்கான மருந்துகள் இருந்தமையினால் குழந்தையின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளதாக வைத்தியர் குறிப் பிட்டுள்ளார். மேலும், பெரும்பாலும் இந்த நோய் வருவதற்கு குழந்தையின் இரத்த உறவு பெற்றோர்கள்தான் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.*

*நாட்டில் இந்நோய் கண்டறியப்படுவது இதுவே முதல் முறைஎனவும், ஆனால்உலகில் ஒரு இலட்சம் சிறுவர்களுக்கு இந்நோய் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் வைத்தியர் மேலும் தெரிவித்தார்.*

*கொஞ்சனெட்டல் மெத்தமோகுளோபினீமியா என்பது மனிதரில் ஒரு அரிய பிரச்சினையாகும், பொதுவாக இரத்தத்தால் நெருங்கிய தொடர்புடைய திருமணங்களுடன் இந்த நோய் தொடர்புடையது.*

*இருப்பினும், இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட குழந்தையின் நோய் விடயத்தில், குழந்தையின் பெற்றோர் அத்தகைய இரத்த தொடர்பு இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர் உலகளவில், இந்த பிரச்சினை 100,000 குழந்தைகளில் ஒருவரை பாதிக்கிறது.*

*மெத்தமோகுளோபினீமியா உள்ளவர்களில், சாதாரண ஹீமோகுளோபின் மாற்றப்படுகிறது, இது திசுக்களுக்கு ஒக்ஸிஜனை எடுத்துச் செல்வதை தடுக்கிறது.*

*இதனால் ஒக்ஸிஜன் பற்றாக்குறை மற்றும் பலவீனம், மூச்சுத் திணறல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.*

*இதேவேளை இலங்கையின் மருத்துவ வரலாற்றிலேயே ஒரு நோயாளிக்கு மெத்தமோகுளோபினீமியா கண்டறியப்பட்டது இதுவே முதல்முறை என்பதை. அனுராதபுர போதனா மருத்துவமனையின் குழந்தை பராமரிப்பு பிரிவின் சிறப்பு மருத்துவர் எஸ்.யு.சி. ரணவக்க உறுதிப்படுத்தியுள்ளார். (ஐ)*

## வசந்தா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற போராட்டத்தின் போது இடம பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னர் சமூகத்தில் இவரைப் பற்றி அதிகம் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2024 இல் வெளியிடப்பெற்றது.